**துரை.தியாகராஜன்,** B.Com., B.L., *வழக்கறிஞர்.*

அலு: 84/C, நீதிமன்ற சாலை, தஞ்சாவூர். 9360353596.

வீடு: 26D, பூக்கார புது வஸ்தா தெரு, தஞ்சாவூர். E-mail:dtmanlaw@gmail.com

---

பெறுநர்:-

தேதி: 04.08.24

திரு. R.ரமேஷ், B.A., B.L., வழக்கறிஞர்,
119, சின்னைய்யா தெரு, பட்டுக்கோட்டை-614602.

***அய்யா.***

***பார்வை: ௧. ௦௪.௦௫.௨௪ தேதியிட்ட எனது கட்சிக்காரர் வழக்கறிஞர் அறிவிப்பு;***
***பார்வை: ௨. ௩௦.௦௫.௨௪ தேதியிட்ட தங்களது வழக்கறிஞர் பதில் அறிவிப்பு.***

தங்களது கட்சிக்காரர் ரெங்கசாமி வேளாளர் மகன் ராமசாமி அவர்களுக்காக தாங்கள் அனுப்பிய பார்வை-2-ல் கண்ட வழக்கறிஞர் பதிலறிவிப்பிற்கு எனது கட்சிக்காரர் பழனிவேல் வேளாளர் மகன் **பிரபாகர்** அவர்களிடம் முறையான தகவலை பெற்று அவரின் சார்பாக நான் தங்களுக்கு கொடுக்கும் மறுப்பு பதில் (Re-Jointer) அறிவிப்பு என்னவென்றால்:-

1. தாங்கள் பார்வை-1-ல் கண்ட அறிவிப்பிற்கு பதிலளிக்க போதிய அவகாசம் தரவில்லை என்பது சரியல்ல என்றும்; மேலும் அதற்கு தாங்கள் போதிய கால அவகாசம் எடுத்துக் கொண்டு பொறுமையாகத் தான் பதில் அளித்துள்ளீர்கள் என்றும்; மேலும் தங்களுக்கு 75வயதாகிறது என்று பார்வை-2-ல் குறிப்பிட்டுள்ளது சம்மந்தமற்ற வழக்கு சங்கதிகளுக்கு அப்பாற்பட்டது என்றும் எனது கட்சிக்காரர் கூறுகிறார்.

2. மேலும் அ/மி.சுப்பிரமணிய சாமி திருக்கோவில் நான்கு கரைதாரர்களுக்கு சொந்தமான இனக் கோவில் இல்லை என்று தாங்கள் கூறுவது உண்மைக்கு மாறான கூற்று என்றும்; ஏற்கனவே தங்களது கட்சிக்காரர் தஞ்சாவூர் இணை ஆணையரிடம் O.A. 5 / 2007 என்ற வழக்கை தாக்கல் செய்து அதில், "ஷை கோவில் பரம்பரைவழி அறங்காவலர்கள் கட்டுப்பாட்டில் உள்ள கோவிலென்றும்; அதில் தன்னை பரம்பரை தலைமைக்காரர்களின் வாரிசு என்று அறிவிக்க கோரி உண்மைக்கு மாறான தகவலையும் ஆவணங்களையும் தாக்கல் செய்து பரம்பரை அறங்காவலர் என்று உத்தரவு பெற்றார் என்றும்; அந்த உத்தரவு உண்மையான பரம்பரை அறங்காவலர் வாரிசுகளாலும் ஊர் பொது மக்களாலும் ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டு O.A. 5 / 2007-ல் கண்ட தங்களது கட்சிக்காரருக்கு ஆதரவான உத்தரவு ரத்து செய்யப்பட்டு விட்டது என்றும் எனது கட்சிக்காரர் தெரிவிக்கிறார்.

3. இதனால் வெறுப்படைந்த தங்களது கட்சிக்காரர் சந்தர்ப்பம் பார்த்து தனக்கு ஆதரவான அரசியல் சூழ்நிலை வந்தவுடன் தனது அரசியல் செல்வாக்கை பயன்படுத்தி மிக மிக ரகசியமாக எவ்வித விளம்பரமும் அறநிலையத் துறை அதிகாரிகள் உடந்தையுடன் செய்யாமல் ஏற்கனவே தனது O.A.5/2007-ல் ஷை கோவில் பரம்பரைவழி அறங்காவலர்கள் கட்டுபாட்டில் உள்ள நான்கு கரை

தாரர்களுக்கு சொந்தமான விதிவிலக்கான இனக்கோவில் என்று சத்திய பிரமாண வாக்குமூலம் கொடுத்த கிராம பஞ்சாயத்து தலைவரின் கணவரும் தங்களது ஆதரவு கோஷ்டிக்காரரும் பார்வை-1-ல் கண்ட 2வது நபருமான புருசோத்தமனை தனக்கு ஆதரவானவராக மாற்றி ஷெ கோவில் பரம்பரைவழி சாராத அறங்காவலர்கள் கட்டுபாட்டில் உள்ள பொதுக் கோவில் என்று அரசுக்கு உண்மைக்கு மாறான தகவலை கொடுத்து அதன்படி தனது முயற்சியின் பேரில் கோவிந்தம்மாள், புருசோத்தமன் மற்றும் தேவிகா செல்ல பாண்டியன் ஆகியோரை ஷெ கோவில் பரம்பரைவழி சாராத அறங்காவலராக நியமனம் பெற்று வந்துள்ளார் என்றும்; மேலும் அதற்கு 30நாட்களுக்குள் தலைவரை தேர்ந்தெடுக்காமல் அரசு உத்தரவு மற்றும் சட்ட விதிகளை மீறி இரண்டு மாதங்கள் கழித்து தலைவரக ஷெ புருசோத்தமனை தேர்ந்தெடுத்துள்ளார்கள் என்றும் எனது கட்சிக்காரர் கூறுகிறார்.

4. மேலும் தங்களது கட்சிக்காரர் கிராம பொது மக்களிடம் சமத்துவம் பற்றியும் தீண்டாமை கூடாது என்பது பற்றியும் பேசுவது போல் பேசியும் ஷெ கோவில் அனைத்து சாதியினருக்கும் சொந்தமான பொதுக் கோவில் என்று கூறி ஆனால் நடைமுறையில் பட்டியல் இனத்தை சேர்ந்த கோவிந்தம்மாளை தலைவராக வரவிடாமல் ஷெ புருசோத்தமனை தலைவராக முறைகேடான முறையில் அறநிலையத் துறை அதிகாரிகள் மூலம் தேர்தலை நடத்தி உண்மையில் தங்கள் கட்சிக்காரர் தான் சாதிய உணர்வுடன் நடந்துள்ளார் என்றும் எனது கட்சிக்காரர் கூறுகிறார்.

5. மேலும் O.A. 5 / 2007-ல் கண்ட சங்கதிகளுக்கும் அதில் கண்ட தங்களது கட்சிக்காரரின் சத்திய பிரமாண வாக்கு மூலத்திற்கும் எதிராக தற்போதைய அரசியல் காரணங்களுக்காகவும் மேலும் தானோ அல்லது தன்னைச் சேர்ந்த ஆதரவு நபர்களோ புருசோத்தமன் என்பவர் உட்பட ஷெ கோவில் பரம்பரை அறங்காவலர்களின் வாரிசுகளாக இல்லாததால் ஷெ கோவில் அறங்காவலர் பதவிக்கு வரமுடியாது என்பதை கருதி தற்போது முரண்பாடான உண்மைக்கு மாறாக ஷெ கோவில் பரம்பரைவழி சாராத பொதுக் கோவில் என்று வேண்டுமென்றே உண்மைக்கு மாறான கூற்றை கூறி தங்களது கட்சிக்காரர் ஆதாயம் அடைந்து உள்ளதாக எனது கட்சிக்காரர் கூறுகிறார்.

6. தங்கள் கட்சிக்காரர் எனது கட்சிக்காரரின் பங்காளி என்பதும்; தங்கள் கட்சிக்காரரும் எனது கட்சிக்காரரும் செட்டில்மெண்ட் ஆவண எண். 5208/1911-ல் கண்ட 23வகையறாக்களில் கண்ட குடும்பதினர்களை சேர்ந்தவர்கள் என்பதும் மட்டுமே உண்மை என்றும்; ஆனால் அதே பத்திரத்தில் கண்ட ஷெ கோவிலை நிர்வகிக்கும் உரிமை கொண்ட ஐந்து தலைமைக்காரர்களின் வாரிசுகளில் ஒருவராக எனது கட்சிக்காரர் மட்டுமே உள்ளார் என்றும்; தங்கள் கட்சிக்காரர் இல்லை என்றும்; எனவே தங்கள் கட்சிக்காரர் எனது கட்சிக்காரருடன் சேர்ந்து ஷெ கோவிலுக்கு பரம்பரைவழி அறங்காவலர் நியமன உரிமை கோர முடியாது என்றும்; எனது கட்சிக்காரருடன் சமஉரிமை படைத்தவர் இல்லை என்றும் எனது கட்சிக்காரர் கூறுகிறார்.

7. மேலும் தங்கள் கட்சிக்காரர் உண்மைக்கு மாறான சங்கதிகளை திரிப்பதில் வல்லவர் என்பதால் செட்டில்மெண்ட்டில் கண்ட சங்கதிகளை அவர் வழக்கம் போல திரித்து பொய்யுரைப்பது சரியல்ல என்றும்; மேலும் தங்கள் கட்சிக்காரர் ஏற்கனவே O.A.5/2007-ல் கண்ட சங்கதிகளுக்கும் அதில் கண்ட தனது சத்திய பிரமாண வாக்கு மூலத்திற்கும் எதிராக ஷெ கோவில் பரம்பரைவழி சாராத பொதுக் கோவில் என்று பொய்யுரைத்து குற்றம் புரிந்ததை பற்றி சிறிதும் அச்சமுறாமல் தற்போதும் ஷெ செட்டில்மெண்ட் பத்தாண்டுகளுடன் முடிந்து விட்டதாக வழக்கை காவிரி பிரச்சினையுடன் மற்ற அரசியல் பிரச்சினைகளுடன் சம்மந்தப்படுத்தி கூறுவது சரியல்ல என்று எனது கட்சிக்காரர் கூறுகிறார்.

8. தங்கள் கட்சிக்காரர் 23வகையறாக்களில் 17வது வகையறாவை சார்ந்தவராக இருக்கலாம்; ஆனால் தலைமைக்காரர்களின் வகயறாவாக தங்கள் கட்சிக்காரர் இல்லாததால் பரம்பரை அறங்காவலர் நியமனம் பெற தகுதியில்லாதவர் என்றும்; தங்கள் கட்சிக்காரர் ஷெ செட்டில்மெண்ட்டை மறுத்து வரும் நிலையில் அதன்படி உரிமை கோருவது எப்படியாவது எதை திண்ணாவது பித்தம் தெளிய வேண்டும் என்ற சட்டவிரோதமான தங்கள் கட்சிக்காரரின் இரட்டை நிலைப்பாடு என்றும் எனது கட்சிக்காரர் கூறுகிறார்.

9. பார்வை-2 பாரா5-ல் கூறியபடி 5வது முறையாக புருசோத்தமன் மற்றும் அவரது வகையறா தங்கள் கட்சிக்காரரின் உண்மைக்கு மாறான சங்கதிகளை வைத்து தான் பரம்பரைவழி சாராத அறங்காவலராக நியமிக்கபட்டார்கள் என்று எனது கட்சிக்காரர் கூறுகிறார்.

10. பார்வை-2 பாரா7-ல் கூறியபடி புருசோத்தமனுக்கு ஆதரவாக வக்காலத்து வாங்க தங்கள் கட்சிக்காரருக்கு எவ்வித அருகதையும் இல்லை என்றும்; புருசோத்தமன் பார்வை-1-ல் கண்ட அறிவிப்பை பெற்று அதற்கு எவ்வித பதிலறிவிப்பும் கொடுக்காமல் அதனை ஏற்றுக் கொண்டு இருக்கும் போது அவருக்காக தங்கள் கட்சிக்காரர் கருத்து எதனையும் தெரிவிக்க அருகதையற்றவர் என்று எனது கட்சிக்காரர் கூறுகிறார்.

11. பார்வை-2 பாரா8-ல் கூறியபடி தங்கள் கட்சிக்காரர் O.A. 5 / 2007 வழக்கிலிருந்து விலகியதே அவர் தன்னை செட்டில்மெண்டில் கண்ட தலைமைக் காரர்களின் வாரிசு என்று உண்மைக்கு மாறான நிலைப்பாடை எடுத்ததினால் தான் என்று எனது கட்சிக்காரர் கூறுகிறார்.

12. தங்கள் கட்சிக்காரர் எப்போதும் கிராமத்தில் நடைபெறும் அனைத்து பிரச்சினைகளிலும் திருவிழக்களிலும் தனது கோஷ்டிகளை கூட்டிக் கொண்டு அனைத்தும் தன்னால் தான் நடைபெறுவதாக உண்மைக்கு மாறான நாடகத்தை நடத்தி தன்னை பெரிய ஆளாக காட்டி ஆதாயம் அடைய முயற்சிப்பவர் என்றும்; பார்வை-2 பாரா14-ல் கூறியபடி தங்கள் கட்சிக்காரர் ஆலோசனையின்படி தான் கிராமத்தினர் நடந்து கொள்வதாகவும் திருவிழாக்கள் நடைபெறுவதாகவும் கூறுவது தற்பெருமை தான் என்றும் உண்மையல்ல என்றும் எனது கட்சிக்காரர் கூறுகிறார்.

12. மேலும் பார்வை-2 பாரா12-ல் கூறியபடி எனது கட்சிக்காரர் சிங்கப்பூரில் வசிப்பதால் தங்களது கட்சிக்காரரின் செயலால் அவமானமும் மனஉளைச்சலும் அடையவில்லை என்பது கேலிக் கூத்தான தரமற்ற வாதமாகும் என்று எனது கட்சிக்காரர் கூறுகிறார்.

13. தங்களது கட்சிக்காரர் தங்களது பதிலறிவிப்பில் மறுத்து கூறிய அனைத்து சங்கதிகளையும் அவரே தக்க முறையில் நிருபித்தக் கொள்ள வேண்டும் என்று எனது கட்சிக்காரர் கூறுகிறார்.

எனவே இந்த அறிவிப்பை கண்டவுடன் தங்களது கட்சிக்காரருக்கு உரிய ஆலோசனையை கூறி பார்வை-1-ல் கண்ட குற்றச்சாட்டுகளுக்கு உரிய விளக்கத்தை அளிக்கும்படியும் அல்லது உரிய மன்னிப்பை பகிரங்கமாக விளம்பரப்படுத்தி தெரிவிக்கும்படியும் தவறினால் எனது கட்சிக்காரர் பார்வை-1-ல் கண்டபடி உரிய நடவடிக்கை எடுப்பார் என்றும் இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

இப்படிக்கு,

Regd. Notice with A/D

To,

திரு. R.ரமேஷ் அவர்கள்,
வழக்கறிஞர்,
119, சின்னையா தெரு,
பட்டுக்கோட்டை.
Pin-614902.

From,
*Mr. Durai Thiyagarajan,*
Advocate B.Com, B.L.
26D, Pookara Puthu Vastha St,
Thanjavur-1. 9360353596.